**வாக்குவாதம்:** (Ref: Dictionary)

(ஒரு விஷயம் குறித்து) வெவ்வேறு நிலையில் இருப்பவர்கள் தாங்கள் சரி என்று கருதியதை வலியுறுத்திப் பேசும் பேச்சு. (heated) discussion, row

உங்கள் வாதத்திறமையினாலே,
உங்கள் கருத்து சரி என்று வாதிட்டு வெற்றி பெற்றாலும்,
அந்த வெற்றி உண்மைக்கு மாறானதாகவும் இருக்கலாம்.
உங்கள் கருத்து சரிதானா என்பதை ஆராய்ந்து பார்த்தால்,
உண்மையை உணரலாம்.

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு.** (குறள் 423)

எந்தப் பொருளைப்பற்றியும், எவரெவரிடமிருந்து கேட்பதானாலும்,
அப் பொருளினது மெய்யான தன்மைகளைக் காண்பதுதான் அறிவு.

வாதத்திறமைக்கு மட்டும் முதலிடம் கொடுப்போமானால்,
உண்மையை அறிந்துகொள்ள வாய்ப்பில்லாமல் போகலாம்.

எனது 6th / 7th Standard School time: ஒரு பட்டிமன்ற நிகழ்ச்சி:
பட்டிமன்றத்தின் தலைப்பு: (தமிழ் இலக்கியத்திலிருந்து)
**"சீதையை ராமன் தீயிலே பரீட்சித்துப் பார்த்தது சரியா? தவறா?"**
சிறந்த பேராசிரியர் ஒருவர் 'சரியே' என்று வாதாடி வெற்றிபெற்றார்.
அதே ஆசிரியர் மற்றொருமுறை நடந்த பட்டிமன்றத்தில்,
'தவறு' என்று சொல்லி வாதாடி வெற்றிபெற்றார். !
வாதத்தின் முடிவும் உண்மையும் வெவ்வேறாக இருக்கலாம்…..
சிந்தியுங்கள்………

**"ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாமல், கேட்கிறவர்களைக் கவிழ்த்துப்போடுகிறதற்கேதுவான வாக்குவாதம் செய்யாதபடிக்கு,…"** (2 தீமோத்தேயு 2:14)

இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிற வேதவசனத்தை வாசித்து, சிந்தித்து, தியானியுங்கள்.

பிரயோஜனமில்லாத வாக்குவாதம் செய்யாதபடிக்கு வாழ,
ஆண்டவர் நம்மை ஆட்கொண்டு ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், **தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம்** இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். (ரோமர் 12:2)

----------------------------------------